# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

EDB
SRI LANKA

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

## முன்மொழிவுக்கான கோரிக்கைக்கான அழைப்பு (IFP)

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் (SLEDB) ஏற்பாடு செய்யப்படும் - Sri Lanka Expo 2027 இற்காக தொழில்முறை வடிவமைப்பு மற்றும் அச்சிடல் சேவைகள் நிறுவனம் மற்றும் ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் ஈடுபடுத்தலின் பெறுகை**

**ஒப்பந்த இல. EDB/PU/NCB/2026/03**

1. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இயங்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) 2027 ஜனவரி 14 தொடக்கம் 17 ஆம் திகதிவரை "Sri Lanka Expo 2027" சர்வதேச கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

2. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) - "Sri Lanka Expo 2027" இற்காக தகுதி பெற்ற மற்றும் தொழில்முறை வடிவமைப்பு மற்றும் அச்சு சேவைகள் நிறுவனம் மற்றும் ஊக்குவிப்பு பொருட்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (SLEDB) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

3. தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் வடிவமைப்பு மற்றும் அச்சு மற்றும்/ அல்லது ஊக்குவிப்பு பொருட்களை வழங்கும் ஒப்பந்தங்களுக்காக முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.

4. 2024 தேசிய பெறுகை வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB – ஒற்றை கட்ட இரட்டை கடிதவுறை விலைமனு நடைமுறை) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

5. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும். தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கான தகைமை அளவுகோல் பின்வருமாறு அமையும். (மேலதிக தகைமை தேவைகள் பெறுகை ஆவணங்களில் தரப்பட்டுள்ளன).

| அனுபவங்கள் | வடிவமைப்பு மற்றும் அச்சிடல் | ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கல் |
|---|---|---|
| a) பொதுவான அனுபவம் | சேவை வழங்குநர் பாரிய அளவான சர்வதேச அல்லது தேசிய கண்காட்சிகள், வர்த்தக கண்காட்சிகள், மாநாடுகளில் வடிவமைப்பு மற்றும் அச்சு சேவைகளில் குறைந்தது 5 (ஐந்து) ஆண்டுகள் நிரூபிக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். | சேவை வழங்குநர் இதனையொத்த சேவைகளை வழங்குவதில் குறைந்தது 5 (ஐந்து) ஆண்டுகள் நிரூபிக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| b) இதனையொத்த இரு ஒப்பந்தங்களில் பிரத்தியேக அனுபவம் | கடந்த 05 (ஐந்து) ஆண்டு காலத்தில் ஒவ்வொன்றும் 02 (இரண்டு) மில்லியன் இ.ரூபாவுக்கு குறையாத ஒப்பந்தப் பெறுமதியுடன் குறைந்தது 02 (இரண்டு) இதனையொத்த பண்பின் பாரிய அளவான வடிவமைப்பு மற்றும் அச்சு ஒப்பந்தங்கள் | கடந்த 05 (ஐந்து) ஆண்டு காலத்தில் ஒவ்வொருன்றும் 02 (இரண்டு) மில்லியன் இ.ரூபாவுக்கு குறையாத ஒப்பந்தப் பெறுமதியுடன் குறைந்தது 02 (இரண்டு) ஒப்பந்தங்கள் |
| c) சராசரி புரள்வு | கடந்த 03 (மூன்று) ஆண்டு காலத்தில் குறைந்தது 12 (பன்னிரெண்டு) மில்லியன் இ.ரூபா | கடந்த 03 (மூன்று) ஆண்டு காலத்தில் குறைந்தது 12 (பன்னிரெண்டு) மில்லியன் இ.ரூபா |
| d) திரவச் சொத்துகளின் கிடைக்கும் தன்மை | சேவை வழங்குநர் குறைந்தபட்சம் இ.ரூபா 3 (மூன்று) மில்லியன் மதிப்பைக் கொண்டிருப்பதை நிரூபித்தல் வேண்டும். | சேவை வழங்குநர் குறைந்தபட்சம் இ.ரூபா 3 (மூன்று) மில்லியன் மதிப்பைக் கொண்டிருப்பதை நிரூபித்தல் வேண்டும். |

6. ஆர்வம் பெற்ற தகுதியுடைய விலைமனுதாரர்கள் தொலைபேசி: 011-2300702, மின்னஞ்சல்: disna@edb.gov.lk கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 42, NDB – EDB கோபுரம், தளம் 6, பெறுகை – உதவிப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

7. பொருந்துகின்ற மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் SLEDB (6ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட முகவரி) இடமிருந்து ஆங்கிலத்திலான பெறுகை ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைக்கும் மீளளிக்கப்படாத இ.ரூபா 3,500 (மூவாயிரத்து ஐநூறு) கட்டணம் பொருந்தும், அதாவது, வடிவமைப்பு மற்றும் அச்சிடல் சேவைக்காக இ.ரூபா 3,500 (மூவாயிரத்து ஐநூறு) மற்றும் ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கல் சேவைக்காக இ.ரூபா 3,500 (மூவாயிரத்து ஐந்நூறு) செலுத்தப்படுதல் வேண்டும். இரு சேவைகளுக்கும் விண்ணப்பிக்கும் விலைமனுதாரர்கள் மொத்தமாக மீளளிக்கப்படாத இ. ரூபா 7,000 (ஏழாயிரம்) கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். பெறுகை ஆணங்களை https://www.srilankabusiness.com/announcements என்ற SLEDB இணையதளத்தின் "Announcement" பிரிவில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும் (பரீட்சிக்கும் நோக்கத்திற்காக மாத்திரம்). விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட முறைக்கு அமைய கொடுப்பனவு மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு குறித்த கொடுப்பனவு பற்றுச்சீட்டு (கள்) அல்லது ரசீதின் (கள்) பிரதிகளை முன்மொழிவுடன் இணைத்தல் வேண்டும். குறித்த செயற்பாடு அல்லது செயற்பாடுகளுக்கான கொடுப்பனவின் தேவையான அத்தாட்சி இன்றி சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகள் மதிப்பீட்டுக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

8. முன்மொழிவுகளின் அசலை வெவ்வேறு கடித உறைகளில் மூடி (வடிவமைப்பு மற்றும் அச்சிடலுக்காக மற்றும் ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கலுக்காக) வெளி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிட்டு;

   - EDB/PU/NCB/2026/03 - "**Sri Lanka Expo 2027** இற்காக தொழில்முறை வடிவமைப்பு மற்றும் அச்சிடல் சேவைகள் நிறுவனம் மற்றும் ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் ஈடுபடுத்தலின் பெறுகைக்கான விலைமனு - வடிவமைப்பு மற்றும் அச்சிடல் சேவைகள்"
   - EDB/PU/NCB/2026/03 - "**Sri Lanka Expo 2027** இற்காக தொழில்முறை வடிவமைப்பு மற்றும் அச்சிடல் சேவைகள் நிறுவனம் மற்றும் உக்குவிப்பு பொருட்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் ஈடுபடுத்தலின் பெறுகைக்கான விலைமனு - ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கல்"

   விலைமனுவை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர் மற்றும் நிறுவனத்தின் பெயர் உறையின் வெளிப்புறத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் (விலைமனு தரவுத் தாள் 8.2 ஐ பார்க்கவும்).

9. விலைமனுக்களை 2026 ஜூன் 23 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் (வடிவமைப்பு மற்றும் அச்சிடல் மற்றும் ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கலுக்காக) வெவ்வேறாக (மேலுள்ள 6ஆவது பந்தியின் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2026 ஜூன் 23 ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் 91 நாட்களுக்கு (2026.09.08) செல்லுபடியாக இருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் வங்கி உத்தரவாதம் ஒன்றின் வடிவில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு ஒவ்வொரு ஒப்பந்தங்களும் விலைமனு பிணை பெறுமதி கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| ஒப்பந்தம் | முன்மொழியப்பட்ட பிணை | |
|---|---|---|
| | எழுத்துகளில் | இலக்கத்தில் இ.ரூபா |
| 01. வடிவமைப்பு மற்றும் அச்சிடல் | இ.ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் | 150,000.00 |
| 02. ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கல் | இ.ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் | 150,000.00 |

10. முன்மொழிவுக்கு முந்திய சந்திப்பு EDB இன் 9ஆவது மாடி VIP அறையில் 2026 ஜூன் 16 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும். அனைத்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களும் முன்மொழிவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

**தலைவர்/ CEO**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)**
**இல. 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு - 02.**
**2026 ஜூன் 09**